648

# ...ாதனை விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.

19/3/42




*Editor & Publisher:*

... A. LOURDUSWAMI, B.A., L.T.,

*...ndary Training School, Trichinopoly.*

...5 மார்ச்சு **1942** மலர் **9**

182305

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 1¼.

# போதனு விஷய பூங்கொத்து

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 249 |
| 2. | Government Examinations ... ... | 251 |
| 3. | கிறீஸ்து சமயமும் தமிழும் ... ... ... | 252 |
| 4. | தமிழ் வழக்கியற் சொற்கள் ... ... ... | 253 |
| 5. | யோசனு விருத்திச் செய்யுள் ... ... | 256 |
| 6. | பாடக்குறிப்பு ... ... ... | 257 |
| 7. | கல்வியும் பெண்ணும் ... ... ... | 260 |
| 8. | ஏ! டெமாகிலிஸ், மேலே பார் ... ... | 263 |
| 9. | ஐயோ! என் பெயரை மறந்துவிட்டேனே ... | 264 |
| 10. | விவசாயிகள் பழமொழிகள் ... ... ... | 265 |
| 11. | பூகோளம் போதிப்பதெப்படி? ... ... | 266 |
| 12. | இயற்கை அறிவு ... ... ... | 268 |
| 13. | இருசொல் அலங்காரம் ... ... ... | 269 |
| 14. | தமிழை மகிமைப்படுத்துவோம் ... ... | 269 |
| 15. | நீந்துதல் பையன்களுக்கு அவசியமா? ... | 270 |
| 16. | யோசனைக்கணக்கு விடை ... ... ... | 273 |
| 17. | அறிவின்மையைப் போக்கும் போர் ... ... | 274 |
| 18. | விடுகதை ... ... ... ... | 275 |
| 19. | திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் மகாநாடு ... | 276 |
| 20. | பெற்றேர் சங்கக் கூட்டங்கள் ... ... | 277 |
| 21. | நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ... ... ... | 278 |
| 22. | பாலர் சங்கீதம் ... ... ... | 279 |


---

## போதனு விஷயப் பூங்கொத்து

### காரியாலயம்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா நம்பரையும் தெளிவாகக் கூபனில் எழுதினல் நலமாக இருக்கும்.

பத்திராதிபர்.

Imprimatur: + JAMES, Bishop of *Trichinopoly.*



# போதனை விஷயப் பூங்கொத்து

கோத்து 32] 15 மார்ச்சு 1942 [மலர் 9

## பத்திராதிபர் குறிப்புகள்

**New Admissions**:—அடுத்த ஜூலை-மீ இப்பாடசாலையில் சேர்ந்து போதனைமுறைப் பயிற்சி பெற விரும்புவோர் இதனடியில் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர்:—

1. இப்பாடசாலையில் அச்சிடப்பட்ட அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) அதில் குறித்துள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து, அதை மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பியே தேவையாகும் பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும். கத்தோலிக்கர்கள் தத்தம் பங்கு சுவாமியார் மூலமாய் மனு செய்துகொள்ள வேண்டும்.

2. ஷை போதனை பயிற்சிக்கு செக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும், எலிமெண்டரி ஹையர் கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜூன்-மீ **30**-ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை **8**-மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின்முன் ஆஜராகி, ப்ரவேசக்கட்டணம் ரூ. **2-0-0** செலுத்தி, ப்ரவேச பரீட்சை எழுதித்தேறாத எந்த மாணாக்கரும் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

குறிப்பு :—1. செக்கண்டரி கிரேடுக்கு, (1) தமிழ் வியாசம். (2) தமிழில் 'பொது அறிவு' ஆகிய இரண்டு பாடங்களிலும்; எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு: (1) பொது அறிவு. (2) கணக்கு ஆகிய இந்த இரண்டு பாடங்களிலும் ப்ரவேச பரீட்சை நடத்தப்படும்.

2. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2-0-0-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, கேள்வி விடைப்பத்திரங்கள், விடைப்பத்திரங்களைத் திருத்துதல் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர் அனைவரும் சேர்க்கைப்பதிவு (Admissions) செய்யும்போது ரூ. 10 "டிபாஸிட்" (Deposit) கட்டவேண்டியது அவசியம் ஆகும்.

4. எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) வழங்கப்படும்.

**பொன் பொறித்த வெள்ளிப் பதக்கப் பரிசு** :—சென்ற வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும், இம்மாதத்தில் நடக்கும் T. S. L. C. பரீட்சையில் ஸெக்கண்டரி கிரேடிலும், எலிமெண்டரி ஹையர் கிரேடிலும் ஷை பரீட்சை எழுதித்தேறி, முதன்மை மார்க்கு வாங்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரால் ஷை "பதக்கப்பரிசு" அளிக்கப்படும்.

---

**பெரியவர்** :—சேச்சா! எப்படா தெச்சா இந்த சட்டை?

**சேச்சன்** :—எங்கப்பா கல்யாணத்தப்போ தெச்சது தாத்தா.

* * *

**எஜமான்** :—அடே சுப்பா! இந்த காலணாவுக்கு வெற்றிலையும் இந்த காலணாவுக்குப் பாக்கும் வாங்கிக்கொண்டுவா.

**சுப்பன்** :—(சிறிதுதூரம் போய்விட்டுத் திரும்பி வந்து) "எந்த காலணாவுக்கு பாக்கு, எந்த காலணாவுக்கு வெற்றிலையும் வாங்கறதுங்க?"

---

82305
600 008

# GOVERNMENT EXAMINATIONS

## Public Examination at the end of VIII Standard in Higher Elementary Schools, April 1942

Time-Table and Instructions to Candidates.

The Examination will be conducted in the order of time and subject shown in the sub-joined table:—

| Days and hours—1942 | | Subjects |
|---|---|---|
| Tuesday, 7th April 10 a.m. to 12 noon | ... | Language. |
| 2 p.m. to 4 p.m. | ... | Elementary Mathematics. |
| Wednesday 8th April-10 a.m. to 12 noon | ... | History and Geography including Civics. |

The centre at which the pupils of a School have to appear may be ascertained from the head of the school concerned.

As regards the private candidates, they will have to appear at the centre entered in the **hall tickets** issued by the office of the Commissioner for Government Examinations, Madras.

Candidates in all the subjects must bring with them for use in the examination their own pens and pencils. The following materials should be brought by candidates taking Elementary Mathematics:—a pencil, a rubber, a foot-rule, a pair of compasses, a protractor and set squares. The borrowing of these materials from neighbours in the examination will be discountenanced.

The candidates appearing for Elementary Mathematics are instructed to draw diagrams where necessary on the answer-papers supplied to them in the examination hall.

A copy of the nominal list will be posted at the entrance to the examination hall a day or two before the examination, and candidates will find their register numbers in the list.

Candidates whose names are not in the printed list furnished to the Superintendents must submit a written declaration through the Superintendents giving full particulars in regard to themselves including their address, and furnish such evidence as may be possible of their having applied for admission to the examination at the proper time and paid the prescribed fees. The answer of such candidates will not be valued unless it is clear that the omission of their names is due to no fault of theirs.

Private candidates will be provided with hall tickets. Besides the hall tickets, they should produce, on the first day of their appearance for the examination, an identification certificate from a responsible person, preferably a Government official, to the effect that the candidate whose signature has been affixed in the presence in the certificate is known to him. They should also be required to put their signatures in the identification certificates produced by them before the Chief Superintendents of the respective centres. The specimen of the identification certificate is printed on the reverse of the Hall ticket form.

Private candidates who come out successful in the examination will have to apply for their certificates to the Deputy Inspector of Schools or the Sub-Assistant Inspectress concerned some time in June 1942 furnishing their full address. Their certificates will not be supplied to them direct.

# கிறீஸ்து சமயமும் தமிழும்

## (M. A. S. Udaiyar)

கிறீஸ்துவ சமயம் நம் இந்தியாவில் செழித்துவளரத் தொடங்கிப் பல நூற்றூண்டுகளாகியும் நம் தமிழ் நாட்டிலும் தலை சிறந்து விளங்கியும் தமிழ் நாட்டுக் கிறீஸ்துவ மக்களிற் பெரும்பாலோர் தமிழை மிக ஆதரிக்கவும் மத சம்பந்தமான நூல்களை நன்கு பயிலவும் முற்படாதது வருந்தத் தக்கதேயாம்.

பொதுவாக நோக்குமிடத்து ஒரு சில மக்களே தமிழ் நூற்பயிற்சியுடையராகிவிருக்கின்றனர். அவர்தாமுந் தம் மகாரைப் பிறமொழித் தேர்ச்சியுடையராக்க விரும்புகின்றனரே யன்றித் தமிழறிவுடையராகத் தமிழ்ப் பற்றுடையராகச் செய்தல் அரிதாயிருக்கின்றது. இதனுல் பிறமொழிகளைக் கற்றல் கூடாது என்பது கருத்தன்று. எவ்வளவாகப் பிறமொழித் தேர்ச்சி யேற்படுகின்றதோ அவ்வளவாகத் தமிழ்ப்பற்றும் உண்டாகும். தமிழ்மொழியின் உயர்வும் தோன்றும் என்பதே. ஆனுல் பிறமொழிகளைக் குறையறக் கற்றுத் தமிழ்மொழியையும் ஆராய்ச்சி செய்வதனுலேயே மேற்கூறிய பயனை அடைய முடியும். தாய்மொழிப் பயிற்சியின்றி நாட்டு மக்களோடு ஊடாடிப் பழகுதலும் அவர் மனத்தைக் கவர்தலும் இயல்வதொன்றன்று. ஆக கிறீஸ்துவ சமய மக்கள் பலரும் தமிழ் நூல்களை நிரம்பக் கற்று ஆராய்ந்து சிறப்புறுவதோடு மத சம்பந்தமான நூல்களை (தமிழ்) கற்று உணர்வதோடு அந்நூல்களைப் பாடப் புத்தகங்களுட் புகுத்துவிக்கவும் செய்தல்வேண்டும். இக்காரியத்தில் பாடப் புத்தகத் தேர்வுக் கழகத்துறுப்பினராயுள்ள நம் சமய மகான்களும் பெரிதுமுயன்று பிறமதச் சரிதைகளையும் நூல்களையும் நூற்பகுதிகளையும், பாடப் புத்தகத்தில் அமைப்பது போன்று நம் சமயச் சரிதைகளையும் நூல்களையும் நூற்பகுதிகளையும் அமைத்திருத்தல் மிக அவசியமென்றும் வற்புறுத்தி நமக்கு ஆக்கமளிப்பார்கள் என்று நம்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் பல வேறுயர்ந்த நம் மதப் பெரியார்களின் சரிதைகளைக் காலத்திற்கேற்பத் தமிழிலியற்றி உதவுமாறு எழுத்தாளர்களையும் வேண்டுகின்றேன். இம்முயற்சிகளைக் கருமமே கண்ணுகக் கொண்டு செய்தும் போதித்தும் வரின் நாம் நம்நாட்டினுக்கும் மதத்தினுக்கும் ஏற்ற தொண்டு செய்பவர்களாவோம்.

## ‘தமிழ் வழக்கியற் சொற்கள்’

(N. R. திருவேங்கிடம்)

(கொத்து 32, மலர் 7, பக்கம் 226ன் தொடர்ச்சி)

இனி சாதாரண வழக்கியற் சொற்களைப் பிழைப்படப் பேசியும் எழுதியும் வருதலைப் பற்றியும் அவைகளைக் களையும் முறையையும் ஆராய்வாம். பிழைகளை நீக்கும் முறையை அறியு முன்னர் பிழைகள் ஏற்பட பொதுவான காரணங்களை யறிதல் ஆவசியம்.

முதலாவதாக தற்காலத்தில் அளிக்கப்படும் கல்விமுறையில் இலக்கணத்திற்கு அதற்குரிய இடத்தை அளிக்காதிருப்பதும், தமிழில் சரிவர ஆரம்ப அறிவு (Primary Knowledge) ஏற்படு முன்னரே பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப் படுவதும், உயர்தரப் பள்ளிகளில் தமிழ் இரண்டாம் மொழியாகவும் (Second language), ஆங்கிலம் முதல் மொழியாகவும் இருந்து வருவதுமேயாம். இதனால் தமிழில் செலுத்தப் படவேண்டிய கவனம் முழுதும் ஆங்கிலம் கற்பதிலும் கற்பிப்பதிலும் செலவழிக்கப்படுகிறது. மற்றும் தமிழ்ப் பாட மொழிந்த தமிழ் வாயிலாய் கற்பிக்கப் படும் ஏனைய பாடங்களில் மொழி நடையில் சற்றேனும் கவனஞ் செலுத்தாமையும், நம் மக்களின் அசட்டுத் தன்மையும் ஆகிய இன்ன, பிறவும் நம் சிறியோரும் பெரியோரும் செய்துவரும் பிழைகளுக்குக் காரணங்களாய் உள.

இன்று நம் நாட்டில் ஆரம்ப, மத்திய, உயர்தரப் பள்ளிகள் யாவற்றிலும் தமிழ் மொழி மூலமாகவே எல்லா பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இங்ஙனம் தமிழில் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படுவதால் மாணவர் மொழித் தேர்ச்சி பெறுவர் என பெரும்பான்மையினரால் கூறப்படுகிறது. இக்கூற்றினையும் ஒப்புக் கொள்வதற்கில்லை. இக்கூற்று உண்மையாயின் ஐந்து வயதில் பள்ளியிற் சேர்ந்து இருபது வயது முடியும்வரை அதாவது பள்ளி யிறுதி வகுப்பு (S. S. L. C) முடித்த பின்னரும் தமிழ் மொழியைப் பிழையற வாசிக்கவும் எழுதவும் தெரியாமல் இன்றைய மாணவர் திகைத்து நிற்கக் காரணந்தான் யாது? இடைவிடாது பதினைந்து ஆண்டுகள் பேசியும், படித்தும், எழுதியும்வந்தும்

பிழையை நீக்கிக்கொள்ள முடியாதது மேற் கூறப்பட்ட காரணங் களாலேயே என்பதை அறியலாம்.

இங்ஙனம் பிழையுடன் எழுதி வருவதோடமையாது பிழை பட எழுதுவதையே ஒரு பெருமையாகக் கூறிக்கொள்ளவும் நம்ம வர் தயங்குவதில்லை. பிழையோடு எழுதுவது ஒரு பெருமை யாம்! என்னே, இவர்தம் மதி! தாய்மொழியில் பிழைபட எழு திப் பெருமைபடையும் நாம் பெறும் ஆங்கில மொழியின் தேர்ச் சியின் அளவினைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இனி பேச்சு வழக்கிலும், எழுத்திலும் கையாண்டுவரும் சில பிழையுடைச் சொற்களை எடுத்துக்கொண்டு அவைகளை நீக்கும் முறையையும் ஆராய்வோம். நிறையினைக் குறிக்கும் 'எடை' என்ற வார்த்தையை 'இடை' என்று அநேகர் எழுது கின்றனர். 'இடை' என்பது இடை (நடு) என்ற பொருளிலும் 'மெல்லிடையாள்' என்பனபோன்ற சந்தர்ப்பங்களில் தேகஉறுப் பினையும் குறிக்க வழங்கப்படுவதாகும். எனவே நிறையினைக் குறிக்க 'இடை' என்பது பொருத்தமற்றது என அறியலாம். பொருள் விளக்கம் சரிவரத் தெரியாததால் இவ்விதப் பிழை ஏற் படுகிறது. இதேபோல 'இமயமலை' என்பதை 'இமையமலை' என எழுதுகின்றனர். 'இமம்' என்பது பனி. பனி உறையும் சிகர மானது பற்றி 'இமயம்' எனப்பட்டது. 'இமை' என்று பகுதி யாகக்கொண்டால் பொருள் வேறுபடுகிறது. இதுவும் பொருள் விளக்கமின்மையால் ஏற்படுவதே. மற்றும் 'சமையல் அறை' என்பதை 'சமயல் அறை' என்பதாக எழுதுகின்றனர். 'சோறு சமைத்தாள்' என்ற சொற்றொடரில் 'சமைத்தாள்' என்பதில் 'சமை' என்பது பகுதி. இப்பகுதியைச் சிதைத்து 'சமயல்' என்று எழுதுவது பிழையாகும். 'சமயம்' (மதம்) என்று எழுதவேண்டிய இடத்து 'சமையம்' என்று அழுத்தந்திருத்த மாக எழுதிவிடுகிறார்கள். இதில் வேண்டாப்பகுதி சேர்க்கப் படுகிறது. இது சொல்லிலக்கண அறிவின்மையால் ஏற்படுவது.

இஃதே போன்று இலக்கண அறிவுக் குறைவால் ஏற்படும் சில பிழைகளைப் பார்ப்போம். எள்ளிலிருந்து எடுக்கும் நெய் (எள்+நெய்) எண்ணெய் என புணர்ச்சியில் 'ண' கரமாகத் திரிந்தது. இப்புணர்ச்சி விதி தெரியாதலால் 'எண்ணை' என்றே மிகப் பலரும் எழுதிவிடுகின்றனர். இப்படிப்பட்ட வார்த்தைகளை

ஆசிரியர்கள் நிலைமொழியையும், வருமொழியையும், பிரித்துக் காட்டி அதன் புணரியலையும் விளக்குவது அவசியம். 'நியாயம்' என்ற வார்த்தையிலிருந்து தோன்றியதும் இப் பதத்தின் எதிர்ப் பொருளை யுணர்த்துவதுமான 'அநியாயம்' என்ற வார்த்தையை 'அனியாயம்' என எழுதுகிறார்கள். 'நியாயம்' என்ற வார்த்தை 'அ' என்ற சர்க்கம் (Prefix) பெற்று 'அநியாயம்' எனக் கூறப்பட்டது. 'னியாயம்' என்பதாக எடுத்து எழுதினால் அது பொருத்தமற்றது எனத் தெரிகிறது. ஏன்? மொழிக்கு முதலில் 'ன' கரம் ஒருபோதும் வராது. ஒரு சர்க்கம் சேர்வதால் நிலைமொழியை மாற்ற எவ்வித நியாயமும் இல்லை. 'கட்டடம்' (கட்டு + அடம்) அதாவது கட்டப்படுவது கட்டடம். பகுதி விகுதி பிரித்தால் பொருள் வெளிப்படையாய் உளது. இதனை பகுதி, விகுதி பிரிக்கமுடியா குழப்பத்தால் மிகப் பெரும்பாலர் (சர்வகலாசாலை மாணவர் உட்பட) 'கட்டிடம்' என எழுதி விடுகின்றனர். இவைகள் யாவும் புணர்ச்சி இலக்கண அறிவுக்குறைவால் ஏற்படுவன.

இனி 'ள' கர, 'ழ' கர குழப்பத்தால் ஏற்படும் சில பிழைகளைப் பார்ப்போம். 'கேள்வி' என்று எழுதவேண்டிய விடத்து 'கேழ்வி' என்றும் 'மருக் கொழுந்து' என்பதை 'மரிக் கொளுந்து' என்றும் அநேகர் எழுதுகின்றனர். 'கேழ்' என்றால் பொருத்தம். இது பற்றியே மனப் பொருத்தமுடைய மணாளனை 'கேழ்வன்' எனக் கூறப்படுகிறது. கேள்வி என்பது காதால் கேட்கப்படும் வினையைக் குறிப்பதாகும். எனவே 'ள', கர 'ழ' கர குழப்பத்தால் பொருள் மாற்றம் ஏற்படுகின்றது. உதாரணமாக 'ஆசிரியர் கேழ்வி கேட்டார்' என்ற சொற்றொடரில் எழுதுவோன் குறிக்கும் பொருளும் இச்சொற்றொடர் உணர்த்தும் பொருளும் முற்றிலும் முரண்பாடாகிறது. இச் சொற்றொடரின் திருத்தம் 'ஆசிரியர் கேள்வி கேட்டார்' என்பதாகும். 'கொழுந்து' என்பது இலைத்துளிர். 'கொளுந்து' என்பது எரியும் சுடர். 'மருக்கொளுந்து' என்று எழுதும் போது விபரீதப் பொருள் ஏற்படுகிறது. 'கொழுந்துவிட்டு எரிந்தது' என்ற சொற்றொடரும் அவ்வாறே முரண்பாடான பொருளையுணர்த்துவதும் உணரலாம். இத்தகைய பிழைகள் கவனக் குறைவாலும், போதிய பொருள்விளக்கம் அறியாது உபயோகிப்பதாலும் ஏற்படுவன. இவ்விரு குறைகளும் போதிய கவனஞ் செலுத்துவதால் அகற்றப்படும்.

இஃதேபோன்று கணக்கிலடங்காச் சொற்களை நம் மாணவரும்—ஏன், நம்மிலேகூடப் பலரும்—பிழைபடச் சொல்லினும் எழுத்திலும் கையாண்டு வருகின்றோம். இத்தகைய சாதாரண வழக்கியற் சொற்களையேனும் (அதிக இலக்கண ஆராய்ச்சி செய்யாவிடினும்) பிழையின்றி எழுத ஆசிரியராய நாம் முயற்சித்தல் வேண்டும். நாமே இங்ஙனம் பிழைபட எழுதிவரின் நம்மிடம் பயிலும் மாணவரிடமும் இந்நோய் பரவும் என்பதை எஞ்ஞான்றும் கருத்திற்கொண்டேனும் நம்மிடம் காணும் பிழைகளைக் களைந்தெறிவதுடன் நம் மாணவரும் இக் குற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க பெருமுயற்சி செய்து பாலர் கல்வியைப் பயனடையச் செய்வோமாக!

---

## யோசனுவிருத்திச் செய்யுள் விடை

(கொத்து 32, மலர் 8, பக்கம் 236.)

ஐந்தெழுத்தாலானமொழி **வசந்தம்.**
முப்பெரும்பொழுதில் ஒன்றேயாகும்.

அதன் தலை அயலாகிய (ச) வை நீக்கி ஈற்றெழுத்தாகிய (ம்) முன் (ன) கரம் சேர்ந்தால் **வந்தனம்** என்று நண்பரைக் கண்டால் கூறும் மொழியாகிறது. அவ்வைந்தெழுத்தின் ஈற்றுக்கு அயலாகிய (ந்,த) என்ற எழுத்துக்களை நீக்கினல் **வசம்** என்ற பதம் வந்து இணக்கம் எனும் பொருளைக் கொடுக்கிறது. ஐந்தெழுத்தில் தலையை நீக்கினல் **சந்தம்** என்ற பாட்டிற்கு வேண்டிய தொனியைக் கொடுக்கிறது. ஐந்தெழுத்தில் தலை அயலாகிய (ச,ந்) என்பவைகளை நீக்கி ஆதியெழுத்தாகிய (வ) வின் அகரத்தை நீக்கி ஆகாரத்தைச் சேர்த்தால் **வாதம்** என்ற கொடிய நோயாகிறது. இவ்விடை செய்யுள் தொகுத்தவரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதால் இதுவே தகுந்த விடையாகும்.

விடை: **வசந்தம்,** இதனையளித்தவர்கள்:

(1) G. T. Joseph, S 2. (2) M. Dominic Fernando, S 1.

---

# பாடக் குறிப்பு

(A. Rayappan)

2-ம் வகுப்பு : நேரம் : 30 நிமிஷங்கள்

பாடம் : கணக்கு

**நோக்கம் :** கெஜம், அடி இவற்றை அறிவுறுத்தல்.

**உபகரணங்கள் :**

1. கெஜக்கோல், அடிக்கோல், நீளமான கயிறு.
2. தரையில் நேராக வரையப்பட்ட ஒரு கோடு.

**பீடிகை :** 1. நீளத்தில் வேறுபட்ட இரண்டு பென்சில்கள், இரண்டு பெஞ்சுகள், இரண்டு நீண்ட அட்டைகள்—இவற்றை கண் பார்வையால் எது அதிக நீளம், எது குட்டை என்பதைப் பிள்ளைகள் கண்டுபிடித்தல்.

2. விளையாடும் இடத்தின் நீளத்தையும், வகுப்பறையின் நீளத்தையும் ஒப்பிட்டு, எதன் நீளம் குறைவு, எது அதிக நீளம் என்று கேட்டல்.

3. வகுப்பறையின் நீளத்தை எதால் அளக்கலாம் என்று கேட்டுப் பையன்களின் பொது அறிவைச் சோதிக்கலாம்.

**நோக்க வெளியீடு :** "இன்று நாம் வகுப்பறையின் நீளம் தோட்டத்தின் நீளம் இவற்றை அளக்கும் விதத்தைப் படிப்போம்" என்று நோக்கம் வெளியிட்டுப் பாடம் ஆரம்பிக்கவும்.

| விஷயம் | முறை |
|---|---|
| வகுப்பறையின் நீளம் :<br>ராஜ் : (உயரமானவன்) 20 காலடி<br>முத்து : 26 காலடி<br>துரை : (குட்டையானவன்) 35 காலடி | வகுப்பறையின் நீளத்தை, அதிக உயரமாயும் குட்டையாயுமுள்ள மூன்று பையன்களை காலடியால் அளக்கச்சொல்லி விஷயத்தில் கண்டபடி கரும்பலகையில் எழுதல். |

| விஷயம் | முறை |
|---|---|
| | மூன்று அளவுகளும் வித்தியாசமாயிருப்பதைக் காண்பித்தல். இப்படியே வேறு மூன்று பையன்களை தோட்டத்தின் நீளத்தைக் காலடியால் அளக்கச்செய்து அளவின் வித்தியாசத்தைக் காண்பித்தல். |
| வகுப்பறையின் நீளம் இப்பொழுது :<br>ராஜ் : 9 கெஜம்<br>முத்து : 9 கெஜம்<br>துரை : 9 கெஜம் | பிறகு கெஜக்கோலைக் கொடுத்து (பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டக் கோலின் பெயர் தெரியாது) வகுப்பறையை அளக்கச் செய்தல். அளவுகள் இப்பொழுது சமமாயிருப்பதைக் காண்பித்துக் கரும்பலகையில் குறித்தல். |
| கெஜக்கோல் = 1 கெஜம் | பிறகு, கொடுக்கப்பட்ட கோலின் பெயர் கெஜக்கோலென்றும் அக்கோலால் ஒரே பொருளை யார் அளந்தாலும் அளவு சமம் என்றும் காட்டுதல் அதன் நீளம் 1 கெஜம். |
| கயிற்றை அளத்தல்<br>அதன்நீளம் = 3 கெஜம் 2 அடி | பிறகு நீளமான கயிற்றைக் கொடுத்து கெஜக்கோலால் அளந்து மீதியுள்ள சிறியபாகத்தை அளக்க வேறொரு சிறிய அளவு உண்டு என்று சொல்லி அடிக்கோலைக் காட்டுதல். அடிக்கோல் என்று சொல்லுதல் கயிற்றில் மிஞ்சிய சிறு பாகத்தை அடிக்கோலால் அளந்து 2 அடி என்று காண்பித்தல் கயிற்றின் நீளம் = 3 கெ. 2 அடி என்று காண்பித் |

| விஷயம் | முறை |
| --- | --- |
| | தல். மற்ெருரு பையனை அதே கயிற்றை அளக்கச்சொல்லி ருசுப் படுத்தல். |
| 1 கெஜம் = 3 அடி | பிறகு கெஜக்கோலை அடிக்கோலால் அளந்து 1 கெஜம் = 3 அடி என்று காட்டுதல். |
| | இவ்வாறே கெஜக்கோலால் அளந்து மிஞ்சிய பாகத்தை அடிக்கோலால் அளந்து பொருட்களின் அளவுகளைக் காட்டுதல். |

அப்பியாசம் : 1. வகுப்புத் தோட்டத்தை அளக்கச் சொல்லுதல்.

2. பிள்ளைகளின் உயரத்தை அளத்தல்.

3. ஜன்னல் கம்பியின் உயரத்தை அளத்தல்.

4. வகுப்பறையின் கதவின் உயரத்தைக் கண்டுபிடித்தல்.

க. ப. சு. :—1. கெஜக்கோல்—1 கெஜம். அடிக்கோல் —1 அடி. 1 கெஜம்=3 அடி.

2. 1 கெஜம், 1 அடி இவற்றின் அளவை கரும்பலகையில் சமீபமாக கோடுகள் வரைந்து காட்டுதல்.

குறிப்பு :—அங்குலத்தை அடுத்த பாடத்தில் அடியோடு சம்பந்தப்படுத்திப் போதிக்கலாம்.

# கல்வியும் பெண்ணும்

## (S. A. Muthu)

(கொத்து 32, மலர் 8, பக்கம் 233-ன் தொடர்ச்சி.)

படிப்பினால் மகளிர்க்கு விவேகமுண்டாகும். வாழ்க்கையின் எல்லா வழிகளிலும் சரியான துணையாயிருப்பர். வந்த விருந்தினரை அன்புடன் பேணுவர்; துறந்தாரை உபசரிப்பர்; ஆதரவற்றவர்க்கு ஆறுதலளிப்பர்; வருவாய்க்குத் தக்கபடி செட்டாய் செலவு செய்வர்; மாமன் மாமியுடன் மரியாதை முறையை அனுசரிப்பர்; ஓய்வு நேரத்தில் அறிவுக்காதாரமான நல்ல புத்தகங்களை வாசித்து புத்தியை அபிவிருத்திசெய்துகொள்வர்; வீண் பேச்சு வம்புவார்த்தை பேசி துன்மார்க்கக் காரியங்களில் ஈடுபடமாட்டார்கள்; புருடர்களுக்கு மந்திரிபோல் சமயத்தில் புத்தி சொல்வர்; கிரகக் காரியங்களில் காரியஸ்தர்களைப்போல கவனிப்பர்; கணக்கர்களைப்போன்று வரவு செலவு இருப்பு இவைகளை கணிப்பர்; அன்பில் அன்னையெனக் கணவனை சம்ரக்ஷிப்பர்; காவல் சேவகர்களென உடமைகளைக் காத்துக்கொள்வர்; நல்ல சுயம்பாகியென அறுசுவை பதார்த்தங்களை உண்ணத்தருவர்; வைத்தியனையொக்க தேக சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை செய்வர்; சங்கீத வித்வானையொப்பத் துன்பத்தை மறக்கடிப்பர்; இன்பமான பதங்களைப் பாடுவர்; இங்கிதமான வார்த்தைகளைப் பேசுவர்; ஆப்த நண்பனென்ன புருடரின் ஆபத்துக்குதவுவார்கள். அப்பொழுது வீட்டுப் பெண்சாதி வேம்பாயிராள்; நாட்டுப் பெண்சாதி கரும்பாயுமிராள்; இல்லறம் சந்தோஷத்திற்கு இருப்பிடமாயிருக்கும்!

இவ்வாறு பெண்சாதி முகத்தைப் பார்க்காவிடினும், பிள்ளை முகத்தையேனும் பார்க்க வேண்டாமா? தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பதைக் கவனிக்கவேண்டாமா? ஓர் ஸ்திரி கருவுற்றது முதல், பிரசவிக்கும் வரையில் எத்தகைய சிந்தனைகள் எண்ணங்கள் கொண்டிருப்பாளோ, அத்தன்மையான எண்ணங்களையும் கருத்துகளையும் கொண்டு அவள் வயிற்று சிசுவும் பிறக்கும். கல்வியினால் அறிவு துலக்கமடைந்த ஓர் அணங்கு பெற்றெடுக்கும் குழந்தைகளும் கன அறிவு பெற்றனவாகவே இருக்கும். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? மேலும் "தொட்

டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற முதுமொழிப்படி தொட்டிற் குழந்தைகளுக்கு நற்பழக்கமும் நல்லறிவும் நயமுடனும் அன்புடனும் ஊட்டத்தக்க வசதியும் பக்குவமும் உடையவள் தாய்தான். இதுபற்றியே அறிஞரில் அநேகர் வேண்டுமானால், ஆண் பிள்ளையை வேலைக்கு நிறுத்திப் பெண்பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பச் செப்புகின்றனர். உலக சரித்திரங்களிலேயும் சமய சாஸ்திரங்களிலேயும் இதுகாறும் தோன்றியுள்ள மகான்களும் பெரியோர்களும் தம் தம் பதவிகளை அவரவர் மாதாமார்களுக்கே உரியது எனக் கூவியறைகின்றனர். ஆம், "மன்னவர் ஆண்டதெல்லாம் மந்திரிகள் ஆண்மை" என்பது மெய்யானால், ஆண்கள் தேசத் தலைவர்களாகவும், சமயத் தலைவர்களாகவும், சாதித் தலைவர்களாகவும் ஆனது அழகிலே பிறந்து, படிப்பிலே வளர்ந்த பவளக்கொடிகளால் என்பதும் மெய்யே. ஒரு குடும்பம் தழைக்க, ஒரு சமூகம் செழிப்புற, ஒரு தேசம் முன்னேற, உலகமே உயர்வடைய பெண்கல்வியே அஸ்திவாரமாகும்.

இஃது இவ்வாறிருக்க "சிவ பூசையில் கரடியைவிட்டது போல்" "பெண்களைப் படிக்கவைத்தால் வித்தியா கர்வங்கொள்வார்கள்; உத்தியோகப் பெருமை அடைவார்கள்; ஆடவருக்கு அடங்கி நடவார்கள்; பெண்களுக்குக் கல்வியே கூடாது" எனச் சாற்றுவீராக்கும்; கேளுங்கள்.

"அழகுக்கு மூக்கை அறுப்பாருண்டா?" அன்றியும் "மூட்டைப்பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவாருண்டா?" அறிய அறிய கெடுவாரில்லையே! பெண்ணின் கோணல் கல்வியில்தானே நிமிரும்! பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்று எந்த நூலிலும் சொல்லவில்லையே! அதற்கு விரோதமாகப் பூவையர் கற்பது கூடாதென்பது

"வருந்திடா துயிர்தரு மருந்தை மானிடர்
அருந்திடிற் சாவாரென் றறைத லொக்குமே"

என்று நீதிநூலில் சொல்லியிருக்கிறது. நாலடியாரில்,

"குஞ்சியழகுங் கொடுந்தானை கோட்டழகும்
மஞ்சள ழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்று நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு" என பெண்கள் கல்வி பயில

வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் உபயோகப்படுவதுபோல அறிவின் அபிவிருத்திக்காகக் கற்பிக்கப்படும் கல்வி உத்தியோகத்திற்கும் சாதனமாகிறது. புருடர்கள்மாத்திரம் கல்வி கற்று கற்றவாறு ஒழுகாமல், கற்றும் கசடர்களாய், படித்தும் பதராய் இருக்கவில்லையா? பெண்களை மாத்திரம் குறைகூறுவானேன்? பெண்கள் முறைப்படி கற்க வேண்டிய நூல்களைக் கற்றூர்களானல், அவர்கள் ஒருக்காலும் வித்தியா கர்வங்கொள்ளார்கள்; புருடர்களுக்கு அடங்கி நடக்காமலிருக்கவும் மாட்டார்கள். ஏன், எழுத்து வாசனையறியாத கணவனைக் கடவுளெனத் துதிக்கும் கோதையரை நான் நன்கறிவேன்.

அதற்கு மாறாக படியாத மடந்தைகள் கடிவாளமில்லாக் குதிரைபோல கண்டபடி திரிந்து ஆடவரை துர்க்குணங்களில் ஈடுபடுத்துகிறூர்கள். இல்லங்களில் மாமியும் மருமகளும் நாயும் பூனையுமென சதா சண்டையிடுகின்றனர். கல்வியில்லாத பெண்களுடன் புருடர் கலந்து வாழ்வதால் புருடர்களின் புத்தியும் மழுங்கிப்போகிறது. அந்தோ மெழுகுபோன்ற சிறுவர்களின் மனதில் கெட்ட பழக்க வழக்கங்களை பசுமரத்தாணிபோல் பதிய வைக்கிறூர்கள். சுருங்கச் சொல்லுமிடத்து அருக்காணி முத்துகளாம் இந்திய மக்களை கரிக்கோலமாக்குகின்றனர். இவை எத்துணை துன்பங்கள்! கொடிது, கொடிது,

> "வாட்டும் உலகில் வழுத்தரிய
> வாழ்க்கைத் துணையாம் மங்கையரை"

படிக்கவைக்காதிருப்பது கொடிது; அவர்களை

> "ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
> ஆக்கி வைப்பது" கொடிது.

மாதரை முன்னிலைக்கும் நன்னிலைக்கும் கொண்டுவருவதே ஆடவரின் மோக்ஷம். மான்கண்ணிலும் அழகான நம்மாதர், அறிவிலும் அறிவாய் விளங்குவதே நம் நாட்டின் விடுதலை. பெண்பாலார் தம் சொந்த அறிவு வளர்ச்சிக்காக மாத்திரமன்றி உலக பொது நலத்தையும் கருதி கல்வி விஷயத்தில் பெரிதும் ஊக்கங் கொள்வார்களாக.

பெண் கல்வி வாழி! பெண்ணுலகம் வாழி! பெண்மூலம் பேருலகம் வாழி! வாழி!

---

## " ஏ! டெமாகிலிஸ், மேலே பார் "

டயோனிசியஸ் என்பவன், சிசிலி தேசத்தில் உள்ள "சைரகியூஸ்" என்ற நாட்டையாண்ட கொடுங்கோல் ராயன். அவனுக்கு "டெமாகிலிஸ்" என்பவன் முகஸ்துதி கூறுபவனும் வேவுகாரனுமாக அமர்ந்திருந்தான். அவன் தனது ராயனின் மகத்துவத்தையும் செல்வசெருக்கையும் கண்டு மனம் புழுங்கலுற்றான். தனது அரச பதவியை ஏற்று கீர்த்தியடைய சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இக்கருத்தை உணர்ந்த அரசன் டெமாகிலிஸின் மதியீனத்தை அறிந்து, அரிய விருந்தொன்றை சிறப்பாக நடத்த உத்தரவிட்டான். டெமாகிலிஸை அழைத்து ராஜ பதவியை ஏற்கக் கட்டளேயிட்டான். நடக்கவிருக்கும் ராஜ விருந்திற்கும் தன்னுடன் வரச்சொன்னான்.

டெமாகிலிஸின் மனம் பூரித்தது. பொன்னுபரணங்களாலும் இரத்தினங்களாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டான். பீதாம்பரம் புனைந்து, நறுமணங்கமழும் வாசனைத் தைலங்களால் பூசிக்கொண்டு தயாராயிருந்தான். விருந்து மண்டபமடைந்ததும் சகலவித ராஜ மரியாதைகளும் டெமாகிலிஸுக்குச் செய்யப்பட்டன. அறுசுவை உணவுகளும், அரும் பட்சணங்களும் உயர்ந்த மதுபானங்களும் கனிந்த பழவர்க்கங்களும் நிரப்பப்பட்டிருந்தன.

புசிக்க ஆரம்பித்தான் புது மன்னன். அருகில் வீற்றிருந்த டயோனிசியஸ் ஏதோ சில வார்த்தைகளைச் சொன்னான்.

" ஏ! டெமாகிலிஸ் மேலே பார்."

உடனே தனது தலையை மேலே உயர்த்தி உற்று நோக்கினான். மதியீன டெமாகிலிஸ் நடுங்கினான். திடுக்கிட்டான். தனது உச்சிக்கு நேரே, ஒரு மெல்லிய மயிர் நுனியில் கட்டப்பட்டுத் தொங்கும் ஒரு பெரிய கூர்வாளைக் கண்டான். எந்த நிமிஷம் அது டெமாகிலிஸ் தலையில் விழுந்து இரு கூறுக்குமோ தெரியாது.

உடனே புன்முறுவலுடன் டயோனிசியஸ் சொல்லுவதாவது:—" டெமாகிலிஸே! நீ இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறாயோ அப்படியே என் உயிர் அவ்வளவு ஆபத்தான நிலைமையில் எப்பொழுதும் இருக்கிறது. என் பதவிக்குரிய சன்மானம் அதுவே. நீ இன்னுமா என் மகத்துவத்தைக்கண்டு காய்கிறாய்? "

டெமாகிலிஸ் பயத்தால் நடுங்கிக்கொண்டு விருந்து முடியும் வரையில் தனது ஆபத்தை நினைத்து நடுங்கிக்கொண்டிருந்து கடைசியில் பயத்திலிருந்து நீக்கிக்கொண்டான். அதன் பிறகு அவன் ஒரு நாளாவது அரசபதவிக்கு ஆசிக்கவில்லை.

---

## "ஐயோ! என் பெயரை மறந்துவிட்டேனே."

ஒரு காலத்தில் மிருகங்களெல்லாம் தங்களுக்கு யாதொரு குறிப்பிட்ட பெயரும் இல்லாததினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தன. விளையாடச்சென்ற தங்களது குட்டிகளைக் கூப்பிட்டு அழைக்க முடியாமலும், நெருங்கிவரும் விரோதிகளை அறிவிக்க முடியாமலும் துன்புற ஏதுவாயிருந்தது. ஒருநாள், நீண்ட வாலுள்ளதும் பஞ்சணையொத்த தேகமுடையதுமான ஒரு சிறிய ஜந்து மிருகேந்திரனிடம்சென்று தன்னுடைய உணவுப்பொருளை, துதிக்கையுடைய பெரிய மிருகம் ஒன்று திருடினதாக முறையிட்டுக்கொண்டது. ஆனால் மிருகராஜன், திருடின மிருகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கொஞ்ச காலத்திற்குப்பிறகு, எக்காளத்தொனியால் எல்லா மிருகங்களையும் தன்னிடம் அழைத்து தனது கருத்தை தெரிவித்து ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு பெயர் இட்டது. முதலில் தன்னுடைய பெயர் சிங்கம் என்றும், தனது தூதுவன் பெயர் யானை என்றும் அறிவித்தது.

பிறகு எல்லா மிருகங்களும் தங்களுடைய நாமதேயங்களை உச்சரித்துக்கொண்டே வீடுதிரும்பின.

"ஏ ஓநாயே, என்ன தைரியம் உனக்கு. ஏன் என்னுடைய ஆகாரத்தைத்தொட வந்தாய்?" என்று புலியானது அதட்டினது. இதைக்கேட்டதும் ஓநாயானது அப்புறம் ஓடிவிட்டது.

"முள்ளம்பன்றி அம்மையே நமஸ்காரம். தேனீயைக் கண்டாயா. எனக்கு காலைப்போஜனத்துக்குத் தேன் அவசரமாயிருக்கிறது" என்றது கரடி.

"பசுவை வீட்டிற்கே கொண்டுவந்து வேண்டிய பாலைக் கறந்துகொள்வது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. சிங்கம் எற்றபடி நமக்கு உபகாரம் செய்தது" என்று பூனை தனக்குள் எண்ணிக்கொண்டது.

இவ்வாறே, சிங்கத்தினுடைய உபாயம் எல்லா மிருகங்களுக்கும் அநுகூலமாயிருந்தது.

மாதமும் முடிந்தது. ஒருநாள் சிங்கம் எல்லா மிருகங்களையும் தன்னிடம் அழைத்து ஒவ்வொன்றாகத் தங்களுடைய பெயர்களைச் சொல்லச்சொல்லிற்று. எல்லா மிருகங்களும் அவ்வாறே செய்ய, ஒரே ஒரு மிருகம் மாத்திரம் தனது பெயரை மறந்து போய், பயத்தினால் வாய் குழற, சிங்கத்தின் முன் நடுங்கி நின்றது. சிங்கமானது கோபங்கொண்டு அதனுடைய நீண்ட காதுகளை பலமாகப் பிடித்து இழுத்துக்கொண்டே அதன் பெயர் "கழுதை" யென்று சொல்லி அதனுடைய ஞாபக சக்திக் குறைவுக்கு அதைக் கண்டித்தது.

---

## விவசாயப் பழமொழிகள்

1. சித்திரைமாதப் புழுதி பத்தரைமாத்துத் தங்கம்.
2. வைகாசி மழை வாழை பெருகும்.
3. ஆனி அரையாறு; ஆவணி முழு ஆறு.
4. ஆடிப்பட்டம் தேடி விதை.
5. ஆவணி இலை அசைய, காவிரி கரை புரள.
6. புரட்டாசியில் பொன்னுருகக்காயும்; மண்ணுருகப் பெய்யும்.
7. ஐப்பசி அடமழை; கார்த்திகைக் கனமழை.
8. கார்த்திகைக்குப்பின் மழையில்லை கர்ணனுக்குப்பின் கொடையில்லை.
9. மார்கழிப் பனி மாகூல் பெருக்கும்.
10. தைப் பனி தரையைத் தொளைக்கும்.
11. மாசி மழை மா பூக்கும்.
12. பங்குனி மழை பதம் கெடுக்கும்.

---

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
182305

## பூகோளம் போதிப்பதெப்படி ?

(I. Anthony)

அறிவு வளர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள பாடங்களில் பூகோளமும் ஒன்றாகும். பூகோளம் என்றாலே சில ஆசிரியர்களுக்குப் பிடிப்பதில்லை. வேறு சில ஆசிரியர்கள் இன்னின்ன இடங்களில் மழை பெய்கிறது, இன்னின்ன இடங்களில் இன்னின்ன பொருள்கள் விளைகின்றன என்று கூறிவிட்டுத் தங்கள் கடன் ஒழிந்துபோனதாக நினைக்கின்றனர். ஏன் அங்கு மழை அதிகம்? மற்ற இடங்களில் ஏன் அவ்வளவு மழை கிடையாது? என்று காரணங்காட்டிப் போதிப்பதில்லை. தங்களுக்கே விருப்பமில்லாத பாடத்தை அவர்கள் எங்ஙனம் தங்கள் மாணவர்களுக்கு நன்கு போதிக்கமுடியும்? பூகோள பாடத்தில் சிரத்தையெடுத்து இதை நம் மாணவர்களுக்கு நன்கு போதிக்கவேண்டுமென்ற விருப்பத்துடன் பூகோள வகுப்பில் நுழையும் ஆசிரியர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

பூகோள பாடமும், மற்ற பாடங்களைப்போல் பற்பல மாறுதல்களையடைந்து தற்போது நவீன பூகோளம் என்னும் பெயரால் விளங்குகிறது. "மனிதனும் அவனைச்சுற்றியுள்ளவைகளும்" (இரண்டிற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தம்) என்பதே இந் நவீன பூகோளத்தின் பொருளாகும். இப்பூகோள பாடத்தைப் போதிப்பதெப்படி? போதிக்கும்போது கையாடக்கூடிய பொருள்கள் யாவை? என்பனவற்றைப்பற்றி யான் எனக்குத் தெரிந்ததை அடியிற் கூறுகின்றேன்.

பூகோளப்பாடம் நிரந்தரமாய் ஆரம்பிக்கப்படுவது மூன்றாம் வகுப்பிலாகும். எனினும் இரண்டாம் வகுப்பிலும் மாணவர்கள் சிறிது பூகோள அறிவைப் பெறுகின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட பாடதிட்டத்தின்படி 2-ம் வகுப்பிற்கு அன்னியநாட்டுச் சிறுவர்களின் கதையைப் போதிக்கவேண்டியிருக்கிறது. இக்கதைகளை கற்பிக்கும் ஆசிரியர் அவைகளை வெறும் கதைபோல் சொல்லிவிடுதல் கூடாது. அப்படி சொல்வதினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அந்நியநாட்டுச் சிறுவர்களிடம் காணப்படும் நற்குணங்களையும், வீரத்தையும்பற்றி போதித்து நம் சிறுவர்

களும் அவர்களைப் பின்பற்றத் தூண்டவேண்டும். உதாரணமாக ஜப்பான் தேசத்துச் சிறுவர்களைப்பற்றி இரண்டாம் வகுப்புக்குப் போதிக்கவேண்டுமென்று வைத்துக்கொள்வோம். முதலில் இந்த ஜப்பான் தேசம் எங்கிருக்கிறதென்று சொல்லுதல் வேண்டும். இத்தனை மைல்களுக்கப்பால் இருக்கிறதென்று சொல்வதினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. நம் தேசத்திற்கு இப்பக்கத்தில் (திசையைக் காட்டி) வெகுதூரத்தில் இருக்கிறதென்று சொல்லவேண்டும். ஜப்பான் தேசம் என்னும் பதத்தை அவர்களிடமிருந்து வருவிக்க கீழ்கண்ட கேள்விகளைக் கேட்கலாம்.

தீபாவளியன்று நீங்கள் என்ன செய்வீர்கள்?

பட்டாசு சுடுவோமென்று கூறுவார்கள். அப்பட்டாசு எங்கிருந்து வருகிறது? என்று கேட்டால் ஜப்பான் தேசத்திலிருந்து வருகிறதென்று பதில் சொல்வார்கள். இப்போது அந்த ஜப்பான் தேசத்தில் உங்களைப்போலுள்ள சிறுவர்கள் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம் என்று சொல்லி, பாடம் ஆரம்பிக்கலாம். பின்பு ஜப்பான் தேசத்துச் சிறுவர்களின் பழக்க வழக்கங்கள், அவர்களின் விளையாட்டுகள், பெற்றோர்களின்மீது அவர்களுக்குள்ள அணைகடந்த அன்பு முதலியவற்றைப்பற்றி வரிசைக்கிரமமாகப் போதித்தல்வேண்டும். பட்டம்விடுதல் நம் தேசத்துச் சிறுவர்களுக்கும் பிரியமுள்ள ஓர் விளையாட்டாகும். ஜப்பான் தேசத்துச் சிறுவர்கள் செய்யும் பட்டத்திற்கும், நம் தேசத்துச் சிறுவர்கள் செய்யும் பட்டத்திற்கும் என்ன வித்தியாசம் என்பதையும் கரும்பலகையில் போட்டுக் காட்டலாம். இவற்றையெல்லாம் போதித்தபின் கடைசியில், எப்படி ஒரு ஜப்பான் தேசத்துச் சிறுவன் தன் தாயைக் காப்பாற்றத் திருடனாக வேஷந்தரித்து, பரிசுபெற்றுத் தன் தாயைக் காப்பாற்றினான் என்னும் கதையையாவது அல்லது ஒரு ஜப்பான் சிறுவன் தன் தாய் தந்தையர்களின் தூக்கத்தைக் கெடுத்த கொசுக்களை விரட்டச் செய்த தந்திரத்தையாவது சொல்லிப் பாடத்தை முடிக்கலாம். படங்களையோ, மாதிரிப் பொருள்களையோ, இடையிடையே காண்பித்தல்வேண்டும்.

(தொடரும்.)

---

## இயற்கை அறிவு

### புகையின் பயன் யாது?

(உ. அ. தாஸ் உடையார்)

புகையினால் ஆகாயம் என்னென்ன விதமாக அசுத்தம் அடைகின்றதென்பதைப்பற்றித் தேவையானமட்டும் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது. நகரங்களில் புகையினால் ஆகாயம் கெடுவதைப்பற்றி நாம் அதிகம் கேள்விப்பட்டிருக்கின்றோம். விசேஷமாய் மக்களுக்கும், பொருட்களுக்கும் புகையினால் ஏற்படும் கெடுதல்களைப்பற்றி நாம் அதிகம் அறிவோம். எனினும் சமீப காலத்தில் லண்டன்மாநகரில் ரஸாயன சாஸ்திரிகளின் ஆராய்ச்சியின் பயனாய் புகையினாலும் நமக்கு வெகு முக்கிய பயன் உண்டு என்று ஏற்படுகின்றது. "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்ற மூதுரை வீணாகுமா? உலகின்கண் உள்ள ஒவ்வொரு பொருளும், உயிரும், மனிதனுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவிபுரிய வேண்டுமென்பதுதானே கடவுளின் நியமனம்.

ஆகாயத்திலுள்ள கிருமிகளும், தொற்று நீரும் புகையினால் அழிக்கப்படுகின்றன. அவை அழிக்கப்படாவிடில் என்ன நடக்கும்?

திராவகப் பீச்சுதல்மூலம் ஏற்படக்கூடிய பலாபலன்களைப் பரிசோதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பல தொடர்ச்சியான சோதனைகளில் அநேக வஸ்துக்களின் புகையினால் ஏற்படும் பலாபலன்களும் பரிசோதிக்கப்பட்டன. அக்காலத்தில் கண்ட உண்மையின்படி சாம்பிராணிப் புகையினால் அதிகப்படியான கிருமிகளைக் கொல்லக்கூடும் என்றும், மெட்டி அட்டைகளின் (Cardboard) புகை அதற்கு அடுத்தபடியாகக் கிருமிகளைக் கொல்லக்கூடும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுதாவது நம் முன்னோர்கள் சாம்பிராணியைப் புகைக்கும் வழக்கத்தை ஏன் வேதானுஷ்டானங்களுடன் சேர்த்தார்கள் என்று நாம் காண்கிறோமல்லவா? என்னே நம் முன்னோர்களின் அறிவின் பெருக்கம்!

680 குயூபிக் மீட்டர்கள் உள்ள ஆகாயத்தில் ஒரு அவுன்ஸின் முப்பதில் ஓர் பாகமுள்ள புகையிலைப் புகை திருப்திகரமானவரைக் கிருமிகளைக் கொல்லக்கூடும். 9 அடி நீளமும்,

5 அடி அகலமும் 10 அடி உயரமும் உள்ள ஓர் அறையில் ஷை அளவுள்ள ஆகாயம் இருப்பதால் ஒரு சுருட்டு தேவையான புகையை உண்டுபண்ணி கிருமிகளைக் கொல்லக்கூடும். இப்பொழுது தெரிகின்றதல்லவா புகையின் பயன்?

---

## இருசொல் அலங்காரம்

(A. Asirvatham)

| | | |
|---|---|---|
| 1. | ஆரம்பக் கல்வி ஓங்குவதெதால்?<br>மக்கள் உறவாடுவதெதால்? | முறையினுல் |
| 2. | பற்கள் வெண்மையாய் இருப்பதேன்?<br>பால்போல் அரிசி துலங்குவதேன்? | தீட்டுவதால் |
| 3. | மாணவ ராசிரியர் கற்பதென்ன?<br>பாவை உள்ளம் மகிழ்வதென்ன? | பிள்ளைதன்மை |
| 4. | முகத்தில் மீசை முளைப்பதெப்போ?<br>முற்பகலிலும் மழை பெய்வதெப்போ? | பருவத்தில் |

---

## தமிழை மகிமைப்படுத்துவோம்

(T. S. S. Arokiasamy, H. M.)

### விருத்தம்

உன்னதஞ்சேர் பூங்கோத்தின்
உறவுகொண்ட அன்பர்களே,
நன்னயஞ்சேர் செய்யுள், கவி
நாட்டிடு மென் சோதரரே,
தன்னிதழ்சேர் தமிழிசையை
தடுமாறி கெடுக்காவண்ணம்
பன்னிதழ் சேர்-நந் தமிழோங்க
பரிவுடன் விளக்குவோமே.

---

## நீந்துதல் பையன்களுக்கு அவசியமா?

(R. Subba Raman, Teacher, H. E. School, Pannaipuram)

அறிவு வளர்ச்சியைப்போலவே தேக வளர்ச்சியும் பிள்ளைகளுக்கு அவசியம். ஆகையால் தேகவளர்ச்சிக்கு விளையாட்டும், வேலையும், பாடமும் முக்கியமானது. இவ்வித விளையாட்டுகள் உடம்பைப் பலப்படுத்துவதும் அல்லாமல் அறிவு வளர்ச்சியையும் பையன்களுக்கு ஏற்பட்ட அயர்வையும் மற்றப் பாடங்களைப் படித்த களைப்பையும் போக்க ஏதுவாயிருக்கிறது. மன உற்சாகத்தையும் ஊட்டுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட விளையாட்டுகளில் ஆசிரியர்கள் கைதேர்ந்து, பையன்களையும் இப்பாடத்தில் தேர்ச்சிபெற வைத்து அவர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. நமது முன்னோர்களை நோக்குங்கால் அவர்கள் கல்வியறிவில் குறைந்திருந்தாலும் தேகப்பயிற்சியில் அதிக ஊக்கம் காட்டி வந்தார்கள். ஒருவரோடு ஒருவர் மல் யுத்தம் செய்வதும், கம்பு விளையாடுவதும், குஸ்தி போடுவதும், கத்திச்சண்டை போடுவதும், வேட்டைக்குச்சென்று ஓடி ஆடுவதுமான விளையாட்டினால் தம் தேகத்தை திடப்படுத்திக்கொண்டார்கள். இந்த விஷயங்கள் குறைந்து கொண்டு வருவதைக்கண்ட கல்வி இலாக்கா அதிகாரிகள் இதில் சிரத்தை எடுத்து தற்போது இதைக் கட்டாயப்பாடமாக வைத்திருக்கிறார்கள். ஆகையால் ஆரம்ப ஆசிரியர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பையன்களை, எல்லாப் பாடத்துடன் தேர்ச்சி பெற வைப்பதுடன் மேற்சொன்ன விஷயங்களைக் கவனித்து குறிப்பிட்ட நேரத்தில் பையன்களை விளையாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்கள் விளையாடக்கூடியதும், விருப்பமுடையதும் எல்லா அவயவங்களுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடியதுமான விளையாட்டுகளைக் கற்பிக்கவேண்டும். இவ்விதமான விளையாட்டுகளில் நீந்துதல் ஒரு முக்கியமான விளையாட்டாகும். அதைப்பற்றிய விவரங்கள் தெரிவிக்க விரும்புகிறேன்.

நன்மைகள் :—நீந்துவதை வழக்கமாக வைத்துக்கொண்டால் சரீர சுகம் ஏற்படுகிறது. நமது சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களுக்குப் புதிதான சக்தியை உண்டாக்குகிறது.

தேகத்தில் உள்ள எல்லாக் கருவிகளுக்கும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்குகிறது. இரத்த ஓட்டம் அதிகரிக்கச் செய்து எல்லாத் தசைகளுக்கும் வலுவைக்கொடுக்கிறது. ஜீரண சக்தி ஏற்பட்டு பசி எடுக்கிறது. ஆகாரம் தவக்கமின்றிப் போய்ச் சேருகிறது. நீந்துவதால் சரீரத்திற்கும் மனதிற்கும் உற்சாகம் ஏற்படுவதுடன் தசைகளுக்கும் உத்வேகம் ஏற்படுவதால் இது மனிதருக்கும் பையன்களுக்கும் சிறந்த விளையாட்டாயிருக்கிறது.

"ஒருவன் எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னால் அவனுக்கு நீந்தவாவது படிக்கவாவது தெரியாது என்று புராதன ரோமர்கள் கூறுவது வழக்கம்." இப்படிப்பட்டவர்கள் நீந்துவதை முக்கியமாக வைத்துக்கொண்டு பாடசாலைகளில் கற்பித்து வருகிறார்கள். எல்லா மனிதர்களும் கல்வியில் ஞானம் பெறுவதுடன் நீந்தக் கற்றுக்கொள்வதும் அவசியம் என்று கருதப்படுகிறது. அதற்காகப் பாடசாலைகளில் நீர்நிலயங்களை அமைத்திருக்கிறார்கள். "இத்தகைய நீர்நிலயங்கள் அமெரிக்காவில் 15,000 இருக்கிறதென்று ஒருவர் கணக்கெடுத்திருக்கிறார்." ஜலத்தில் அபாயம் ஏற்படாமல் இருக்க அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கத்தார், ஜனங்களுக்கு நீந்தவும் ஜலத்தில் விழுந்துவிடின் உயிரைக் காப்பாற்றவும் உபதேசித்து வருகிறார்கள். இதனால்தான் மேல்நாட்டார் நீந்துவதில் தேர்ச்சிப் பெற்று சமுத்திரத்தையும், கடலையும் அற்பமாக நினைத்து அயல் நாட்டாருடன் உறவாடிக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டிலே இது சுத்த சூன்யமாயிருக்கிறது. சிறு கிராமத்தில் இருப்பவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களும் நகரவாசிகளில் பெரும்பாலோரும் இதைக் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகையால் ஆசிரியர்களாகிய நாம் இதில் கவனம் எடுத்துத் தாமும் பயின்று பையன்களுக்கும் கற்றுக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நமக்கு வேண்டிய ஜலவசதி பள்ளிக்கூடத்தில் கிடைக்காவிட்டாலும் குளம், குட்டை, கிணறு இவைகளில் கற்பிக்கலாம்.

ஜல பயத்தைப் போக்குதல்:—நீந்தக் கற்றுக்கொள்வோருக்கு ஜலத்தில் மூழ்கிவிடுவோமே என்ற பயம் ஏற்படுகிறது. ஜலத்தில் மிதக்க முடியாது என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பழக்கப் பல வழிகள் இருக்கின்றன.

முதலில் கற்றுக்கொடுப்பவர் தண்ணீரில் இறங்கி எந்த விதம் கைகால்களை அசைக்கவேண்டும் என்று காட்டவேண்டும். பின் அவர் கற்றுக்கொள்வோரின் இடுப்பில் ஒரு கயிற்றைக்கட்டி ஜலத்தில் தான் பார்த்தபடி கை, கால்களை ஆட்டச்செய்யவேண்டும். கயிற்றைப் பிடித்திருப்பவர் கயிற்றை கொஞ்சம் விட்டு மூழ்கச் செய்தும் கயிற்றைத் தூக்கியும் இந்த விதமாக ஜலபயத்தைப் போக்கி நீந்தக் கற்பிக்கலாம்.

மற்றொருமுறை யாதெனில்:—கற்றுக் கொள்வோருடன் கற்றுக்கொடுப்பவரும் ஜலத்தில் இறங்கி மார்பளவு தண்ணீர் வந்தவுடன் தலையைப் பின்புறம் சாய்த்துக்கொண்டும் கால்களை நீட்டிக்கொண்டும் கைகளால் தண்ணீரை இழுத்துக்கொண்டும் போகும்படி சொல்லவேண்டும். போதகர் அவன் இடுப்பில் ஒரு கையும் கழுத்தையும் ஆரம்பத்தில் பிடித்துக்கொள்ளவேண்டும். பின், பிடிக்காமலே கூடச்சென்று பயத்தைப்போக்கி நீந்தக் கற்பிக்கலாம். இதில் போதகருக்கும் மாணுக்கனுக்கும் சம்பந்தம் இருந்துகொண்டேயிருக்கிறது.

உதவியில்லாமல் பழகும் முறை:—சுரை நெற்றை (நன்றாக உலர்ந்து துவாரமில்லாதது) எடுத்து அதைப் பழகுவோரின் இடுப்பில் கட்டி நீந்தக்கற்றுக்கொள்ளலாம். இது மனிதனை தண்ணீரில் மூழ்கவிடாமல் பாதுகாக்கிறது. இதற்குப் பதிலாக மண்ணெண்ணெய் கால் தகரத்தையும் உபயோகிக்கலாம். இந்த வழியினுல் சீக்கிரத்தில் பலனை எதிர்பார்க்கமுடியாது. முதலில் பழகுவோருக்குத் தேங்கி நிற்கும் தண்ணீர் அவசியம்.

தண்ணீரில் கீழ் நோக்கிச்செல்லுதல்:—தண்ணீரில் குறிப்பிட்ட ஆழம் வரைச் செல்லவேண்டுமானுல் இரண்டு கைகளாலும் மேலே தள்ளிவிட்டுக்கொண்டே கீழேபோகலாம். தவளை, ஆமை, மீன் இவைகளைக் கவனிக்கவும். பின் மேலே வரவேண்டுமானுல் நாம் எவ்வளவு பலவந்தமாக இருந்தாலும் ஜலம் மேலே கொண்டுவந்துவிடும். இதைக்காட்டிலும் சீக்கிரம் வரவேண்டுமானுல் கைகளாலும் கால்களாலும் தண்ணீரைக் கீழே அமுக்கவேண்டும். கீழே சென்று மேலே வரும்வரை சுவாசிக்காமல் இருக்கவேண்டும்.

பின்லந்து தேசத்தில் குறிப்பிட்ட ஆழம் வரை செல்லவேண்டுமானுல் ஒரு வஸ்துவைப் பிடித்துக்கொண்டே போகிறார்கள். பின் அதை விட்டுவிட்டால் ஜலம் மேலே கொண்டு

வந்துவிடும் என்று கற்பிக்கிறார்கள். இதன்படியே 4 அல்லது 5 கெஜ நீளமுள்ள கோலை உபயோகிக்கிறார்கள். நீந்தக் கற்றுக் கொள்வோரைக் கோலின் அடியில் நிறுத்தி அவர் தண்ணீருக்குள் போகும்வரை கோலை இறக்குகிறார்கள். பிறகு கம்பை விட்டதும் சட்டென்று மேலே வந்துவிடுகிறார்கள். தடவைக்குத் தடவை ஆழத்தை அதிகரித்துக்கொண்டேபோகிறார்கள். இந்த விதமாக நீந்தக் கற்பிக்கிறார்கள்.

---

## யோசனைக் கணக்கு

ஒரு குளத்தை முதல் வாய்க்கால் 1 நாளிலும், இரண்டாவது வாய்க்கால் $\frac{1}{2}$ நாளிலும், மூன்றாவது வாய்க்கால் $\frac{1}{3}$ நாளிலும், நான்காவது வாய்க்கால் $\frac{1}{6}$ நாளிலும் நிரப்பும். நான்கு வாய்க்கால்களையும் ஒரேகாலத்தில் திறந்துவிட்டால் குளம் எக்காலத்திற்குள் நிறைந்துவிடும்?

S. R. Mahadeva Aiyar, H. M.

100 அடி உயரமுள்ள ஒரு செங்குத்தான குன்றின்மேல் ஒரு கோபுரம் கட்டவேண்டியிருக்கிறது. தரையிலிருந்து குன்றின் மட்டம் வரையிலும் 1000 படிகள் வைத்துக் கட்டவேண்டும். கற்கள் ஒவ்வொன்றும் 15 அடி நீளம், 1 அடி அகலம், 1 அடி கனம் உள்ள எத்தனை கற்கள் தேவையாகும்?

R. Kandasamy Pandaram, H. M.

---

# அறிவின்மையைப் போக்கும் போர்

(U. A. Das Udayar)

இதென்ன ! உலகம் எங்கும் உள்ள போர் போதாதென்று இந்தப் போர் வேறு ! இல்லை, இல்லவே இல்லை. இதில் உங்கள் ஆயுதம் தேவை இல்லை. மனம், உழைப்பு, அவ்வளவுதான்.

இப்போரைப்பற்றி சமீபத்தில் மதுரை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ G. L. லோபோ தஞ்சையில் 400 உபாத்திமார்கள் முன்னிலையில் பேசினர். அதன் சாரமாவது.

மக்கள் நன்னயமாய் வாழவேண்டும் என்னும் நோக்கமே உபாத்திமார்களின் வேலைக்குத் தூண்டுதலாய் இருக்கவேண்டும். பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற குறுகிய மனப்பான்மை இருக்கக்கூடாது. 1937-ம் ஆண்டில் கல்வி இலாகா அறிவின்மையைப் போக்கப் போர்க்கோலம் கொண்டது. இப்பொழுது வெகு தூரம் தன் இலக்ஷியத்தில் முன்னேறியிருக்கின்றது. இதற்கு உபாத்திமார்களே பெரிதும் காரணம். அவர்கள் இறுதிவரை ஊக்கத்துடன் உழைக்கவேண்டும் என்பது என் கோரிக்கை. நம் இலாகா இத் தர்மயுத்தத்தை மூன்று விருது வாக்குகளுடன் துவக்கினது. 1. பள்ளிக்கூடம் என்றுகூட கூற லாயக்கற்றவைகளை எடுத்துவிடுதல். 2. திறமையற்ற பள்ளிக்கூடங்களைக் கண்டித்துத் திருத்துவது. 3. பெண் கல்விக்கு ஊக்கம் கொடுப்பது. இதற்கு ஆதியில் மானேஜர்கள் விரோதம் ; பெற்றோர்கள் ஒதுங்கி நின்றனர். எனினும் இலாகாவின் கண்டிப்பான ஒழுங்குகள் கல்விபரவ உதவியது.

இதனல் இப்பொழுது நிலைமை திருப்திகரமாகிவிட்டது என்றல்ல. இன்னும் கண்துடைப்புப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவர்கள் தங்கள் கடமையை இன்னும் உணரவில்லையே என்று நாம் வருந்துகிறோம். பெற்றோருடன் அதிகாரிகள் ஒத்துழைத்தால் நிச்சயம் நூற்றுக்கு நூறு வெற்றிபெறலாம். ஆனல் அவ்வித ஒத்துழைப்பை மானேஜர் மூலமும் உபாத்திமார்கள் மூலமும்தான் பெறமுடிகின்றது. இரண்டாவதாக புதிய முறைகளைக் கையாடுவதாலும் நம் எண்ணம் நிறைவேறும். பள்ளியைப் பையன் விரும்பவேண்டும். சுற்றுப்புறங்கள் அழ

காக இருக்கவேண்டும், அங்கு ஓர் உண்மை நண்பன் தனக்கு உண்டு என்று அவன் எண்ணவேண்டும். பள்ளி அவனது புலன்களைக் கவரவேண்டும். இறுதியாக உபாத்திமார்கள் சுய முயற்சியால் தங்கள் அந்தஸ்திலும், பொதுமக்களின் மதிப்பிலும் உயரவேண்டும். கண்துடைப்பு வேலைகளால் காரியம் நடத்துவதை உதறித் தள்ளவேண்டும். அன்று நம் இலக்ஷியம் நிறைவேறியது. நாட்டின் அறிவின்மையும் ஒழிந்தது.

---

## விடுகதை

(வீ. பிச்சைமுத்து)

நான் மண்ணிலே உருண்டு
மகிழ்வுடன் வளர்ந்து
குளித்து முழுகி
குங்குமப் பொட்டிட்டு
கொண்டையில் பூச்சூடி
கொல்லையில் நிற்கும்போது
அப்பொழுது பையன் நத்தவில்லை
நான் வாடி வதங்கி
மகிழ்வு குலைந்து
மந்தையில் நின்று
என்னை மதிக்கவில்லை கூறுகிறார்
இப்பொழுது பையன் நீ என்னை நக்கவந்தாய்.

---

# திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் மகாநாடு

(8-2-42) இன்று மாலை 1 மணிக்கு திருச்சி டீச்சர்ஸ் கில்ட் ஹவுஸில் சென்னை மாகாண ஆசிரியர் சங்கக் காரியதரிசி உயர் திரு S. T. ராமானுஜயங்கார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மகாநாட்டிற்கு எல்லா தாலுக்கா லேபர் ஆசிரியர்களும் திருச்சி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் தலைவர்களும் முக்கியஸ்தருமான திரு. R. மருதை, P. சிவபிச்சை, A. G. சன்னாசி, M. பாலகிருஷ்ணன், பிரான்சிஸ், இருதயம் மற்றும் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

பிரபல வக்கீலும், ஜில்லா லேபர் அட்வைசரி போர்ட் மெம்பருமான திரு. A. M. J. தனசாமி பிள்ளை அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்தார். அதுபோது லேபர் ஸ்கூல் ஆசிரியர்கள் மிக்க சிறத்தையுடன் வேலைசெய்யவேண்டுமென்றும், அவர்களுடைய குறைகளைத் தான் முயற்சிப்பதாயும், கல்வி டைரெக்டர்களுடைய தேர்ச்சிப் பரீக்ஷைகள் லேபர் ஸ்கூல்களுக்கு பொருந்தாது என்றும், ஆதிதிராவிடப் பிள்ளைகளுக்கு இடைவேளையில் உணவளித்தால் பள்ளிக்கூட ஆஜர் விருத்தியடையுமென்றும் உணர்ச்சி ததும்ப நீண்டதோர் சொற்பொழிவு இயற்றினார்.

தலைவர் முன்னுரையில் லேபர் டிபார்ட்மெண்ட் தாழ்த்தப்பட்டோருக்குச் செய்துவரும் வேலையைப் பாராட்டியும், லேபர் பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த உபகரணங்கள் கட்டட வசதி இவைகள் செய்தால் பிள்ளைகள் கவர்ச்சியாய்ப் பள்ளிக்கூடம் வரும். ஆஜரும் விருத்தியடையுமென்றும், லேபர் ஆசிரியர்களின் நிலையையும், நிரந்தரமாக்கி, மற்ற முனிசிபல், போர்ட் ஆசிரியர்களைப்போல் லீவ் பிராவிடண்ட்பண்ட் முதலிய சவுகரியங்கள் ஏற்படுத்தி கொடுத்தால், லேபர் ஆசிரியர்களும் உயர்தரமான வேலைகள் செய்ய முடியுமென்றும் கூறினார். தவிர பள்ளிக்கூடங்களை மேல் பார்வையிடவும், அவைகளை ஆஜர்விருத்தி செய்வதற்கும், ஜெயில் விசிட்டர்போன்ற உத்தியோக பற்றற்ற பிறமுகர்களை நியமிக்கும்படிக்கும், போலீஸ், கிராம அதிகாரிகளைக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாத பிள்ளைகளின் பெற்றோர்களை திட்டம் செய்யும்படிக்கும் யோசனையும் கூறினார்.

நிரந்தரமில்லாத லேபர் ஆசிரியரின் வாழ்க்கை வேலை அசிரத்தைக்கும், லஞ்சப்பேய்க்கும், காரணமாயிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

பின் திருச்சி ஜில்லா கில்டின் லேபர் ஆசிரியர் நிர்வாக கமிட்டி மெம்பர்கள் ஏக மனதாய் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன், அநேக தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறினபின், தலைவர் முடிவுரையாக உபாத்தியாயர்கள் தங்கள் கடமைகளை செய்யவேண்டுமென்றும், அவர்களின் உரிமைகளை போராடிவாங்கித் தருவதாயும் உறுதி கூறினர். காரியதரிசியால் வந்தனோபசாரங் கூற மகாநாடு இனிது முடிந்தது.

---

## பெற்றோர்சங்கக் கூட்டங்கள்

19–1–42-ல், முசிரி தாலுகா, பாலகிருஷ்ணம்பட்டி லேபர் பாடசாலை பெற்றோர் சங்க ஆண்டு விழா ஸ்ரீ மதுராபுரி நாயக் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

R. கந்தஸாமி பண்டாரம், காரியதரிசி.

11–2–42-ல், தூத்துக்குடி தூரிபுஷ்டத்தில், **சங். லூர்து ஸ்வாமிகள்** விழா கொண்டாடப்பட்டது. அதாவது, இந்த நன்னாளில், திருச்சி போதனாமுறைப் பாடசாலைத் தலைமையாசிரியரும், "போதனா விஷயப் பூங்கொத்தின்" பத்திராதிபருமான சங். A. Lourduswamy, B.A., L.T., அவர்களது திரு நாமம் பூனைந்த திருவிழா நடைபெற்றது. அன்று அவரது உருவப்பட ஊர்வலமும், "புட்பால்" (Foot-ball) பந்தயமும் நடத்தப்பட்டது.

15–2–42-ல், கரூர் தாலுகா, வேடிச்சிபாளயம் எயிடெட் எலிமெண்டரி பாடசாலையின், 9-வது ஆண்டு விழா கரூர் ஜில்லா முனிஸீப் உயர்திரு. S. ஆதிநாராயண செட்டியார், B.A., B.L., அவர்களது தலைமையில் வெகு விமரிசையுடன் நடைபெற்றது.

M. ராசப்பபிள்ளை,
மானேஜர், தலைமை ஆசிரியர்.

18–2–42-ல், முசிரி தாலுகா, பச்சப்பெருமாள்பட்டி லேபர் பாடசாலையின் பெற்றோர் சங்கக்கூட்டம் ஷை தாலுகா ரேஞ்சு ஜூனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் அவர்களின் தலைமையில் சிறப்பாய் நடந்தேறியது.

M. சவரிமுத்து, காரியதரிசி.

---

## நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

10–2–'42 & 11–2–'42. **Boarding Day** :—இச்சுபதினங்களில் நம் பாடசாலை Boarding Day வெகு சிறப்பாயும் மிக்க குதூகுலத்துடனும் கொண்டாடப்பட்டது. 11–2–'42 புதன் கிழமை நம் பாடசாலைத் தலைமை ஆசிரியரும், போர்டிங் General Prefect-ம் ஆகிய சங். லூர்து ஸ்வாமியவர்களின் திருநாள். அஃது லூர்துமாதா திருநாள். இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் ஆசிரியர்களும், மாணவர்களும், உள், வெளிப்பிள்ளைகளும் மிகுந்த உற்சாகம், பரபரப்பு, தங்கள் ஆவல், முதலியவற்றை வெகுவாய் வெளிப்படுத்தினர்.

10–2–'42. செவ்வாய்க்கிழமை மாலையில், ஆசிரியர்களும், வெளிமாணவர்களும், பிள்ளைகளும் சங். ஸ்வாமியார் அவர்களை சபா மண்டபத்தில் வரவேற்று, வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தும், கீதங்கள் பாடியும் இன்னும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டும், அன்னவரை மகிழ்விக்க, அன்னவரும், அனைவர்க்கும் தமது ஆசியையும், சந்தோஷத்தையும் கூறினர்.

மறுநாள் 11–2–'42-ல் போர்டிங் மாணவர்கள் ஷெ விழாவை விசேஷவிதமாகக் கொண்டாடினர். இச்சுபதினத்தன்று லூர்துமாதா கெபி, வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலையில் சங். லூர்துஸ்வாமியவர்களால் பாடல் பூசை தொடங்கியது. பூசைக்குப்பின் 19 பேர் சபையில் புதிய அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மாலையில் நம் சபாமண்டபத்தில் சங். ஸ்வாமியார் அவர்களுக்கு குதூகலமான வரவேற்பளித்து மாணவர்கள் தங்கள் நன்றிகளைச் செலுத்திக் கொண்டனர். தலைவர் அவர்களது ஆசியுடன் ஷெ கூட்டம் நிறைவெய்தியது. அன்று நம் பாடசாலை ரேடியோ மூலம் அனைவரும் சந்தோஷத்தை அனுபவித்தனர். மேலும் பின்னர் புகைப்படமும் (Group Photo) எடுக்கப்பட்டது.

16–2–'42 to 19–2–'42. ஸீனியர் மாணவர்கள் பாடசாலைப் பரீட்சை:—(Final Examination) இத்தினங்களில் நமது ஸீனியர் மாணவர்கட்கு வருடாந்திர, பாடசாலை முடிவு பரீட்சை நடைபெற்றது.

26–2–'42. சாரணர்களின் அனுதாபக்கூட்டம்:—நம் பாடசாலை எலிமெண்டரி கிரேடு ஸீனியர் மாணவரும், நம் பாடசாலை சாரணர்களில் ஒருவருமாய் இருந்துவந்த திரு. ராஜா அடைக்கலம் என்பவர், தம் வீட்டில் 18–2–'42-ல் மரணமடைந்ததை முன்னிட்டு, ஷை தேதியில் சாரணர்கள், சாரணத் தலைவர் ஆசிரியர் திரு. R. பிச்சை பிள்ளையவர்களின் தலைமையில் ஒன்று கூடி, மரணமடைந்த அன்னவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அநுதாபங்காட்டிய தீர்மானங்களை நிறைவேற்றினர்.

28–2–'42. பூகோளபாட உபன்னியாசம்:—பரீட்சை எழுதவிருக்கின்ற நம் ஸீனியர் கிரேடு மாணுக்கர்கட்குப் பிரயோஜனமாகும்படி, திருச்சி, அர்ச். சூசையப்பர் கலாசாலை ஆசிரியர் திரு. ராஜேந்திரம், B A., L.T. அவர்களால் பூகோளபாட போதனையைப்பற்றி பிரசங்கம் நடத்தப்பட்டது.

---

## பாலர் ஸங்கீதம்

### கடவுள் அருளிய இலவச இயற்கைக் கோடைகள்

(4, 5 வகுப்புகள்)

(A. Gnanadickam, *Music Teacher*)

**கோலாட்டம்**

நோட் மெட் 29. திரிச்ர கதி ஆதி.

**கண்ணிகள்**

1. பரமகருணை முதல்வ இறைவ பதமலர் போற்றி
வரவும்பாலர் மனதில்நாளும் மகிழ்செய்வாய் தேற்றி

2. தேற்றும் மழையும் வெயிலும் பனியும் காற்றும் முறையே
தோற்ற தருபூ மலர் காய் பழம் துளிரக் குறையா

3. குறையா ஒளிரும் சூர்யசந்த்ர உடுக்கள் விந்தையின்
முறையைக் கண்டுன் மகிமை யாவர் முற்றும் போற்றுவர்

4. போற்றும் பறவை இனியக் கானம் புகழும் மாட்சியே
ஏற்றமன ஸாந்தியெங்கும் இசைந்தக் காட்சியே

5. காட்சி இரவும் பகலும் சௌக்யம் காண ஜீவர்க்கு
ஆட்சி சிறந்து விளங்கஞானம் அருள்வர் பாலர்க்கு

6. பால அருவி நதியாய்க் கடலில் பாய்ந்து நீர்தங்கும்
கால நிலையைப் பொருந்தி மேகக் கணம் மழை பொங்கும்

7. பொங்கும் பொருளும் திரளத் தரையில் புகழாய் ஜீவர்கள்
பொருந்தி வாழ வழிதிறந்த புவியீசா சரண்.

## ஸ்வரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஸஸஸ | ககக | பபப | ததரீ | ஸ்ஸ்ஸ் | நீத | பா, | ; , | ‖ |
| பரம | கருணை | முதல்வ | இறைவ | பதம | லர்போ | ற்றி, | ; , | ‖ |
| ஸ்ஸ்ஸ் | நீத | ரீரீரீ | ஸ்ாநி | பபப | தாநி | ஸ்ா, | ; , | ‖ |
| வரவும் | பாலர் | மனதில் | நாளும் | மகிழ்செய் | வாய்த்தே | றி, | ; , | ‖ |

குறிப்பு:—மேற்காட்டியுள்ள பாடலை கடவுள் வணக்கத்திற்கும் உபயோகிக்கலாம்.

கோலடிக்கும் பாலிகைகளை இரு கட்சியாய்ப் பிரித்து முதல் கட்சியார் ஒரு அடி பாடி முடித்தவுடன், இரண்டாம் கட்சி அடுத்த அடி பாடி முடித்தல் வேண்டும். பாட்டின் இராகதாள நடைக்கு ஒவ்வும் விதமாக உபாத்தியாயர் தம் அனுபவத்தைச் சார்ந்தவிதமாகக் கோலடிக்கும் பாலிகைகளுக்குப் பழக்குவித்துக்கொள்ளலாம்.

182300

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
*South Indian Music School, St. Thomas Church Rd.,*
*OOTACAMUND.*

---

# போதனை விஷயப் பூங்கொத்து

## காரியாலயம்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்றாகச் சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பைண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணா வீதம் அனுப்பவேண்டும். வேண்டிய பத்திரிகைகளின் மலர் நம்பரைத் தெரிவித்தால் அவைகளை அனுப்புவோம்.

பத்திராதிபர்.

Reg. No. M. 1534.

# OUR EMPLOYMENT BUREAU

1. Wanted at once 3 Secondary Trained Teachers. Apply to the Parish Priest, R. C. Mission, Periatalai, Tinnevelly Dt.

2. Wanted immediately a large number of Trained Teachers for the aided schools in Perambalur Range, Trichy Dt., on not less than 85% of the grant earned by them. In deserving classes the full grant will be paid them. Apply to the Deputy Inspector of Schools, Perambalur Range.

3. Wanted at once Higher Grade Trained Teachers on Rs. 15/- per mensem for Kuppireddipatti Panchayat School under the Marudur Panchayat Board, and for Chinnamuthambadi Panchayat School under the Sembianatham Panchayat Board in Kadavur Zamin. Apply to the Dy. Inspector of Schools, Kulitalai Range, Trichy Dt.

4. Wanted H. E. Trained Teacher or Mistress on Rs. 15–1/1–20 and Sec. Trained Teacher or Mistress on Rs. 18–1/1–25. Apply to the Manager, Mahajana School, Sendamangalam, Salem Dt.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.